


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






### இலங்கை மக்களுக்கு உதவ திமுக எம்எல்ஏகளின் ஒரு மாத ஊதியம்

# தானம்

## முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு திமுக சார்பில் ரூ.1 கோடி நிவாரண நிதி பொதுமக்களும் உதவி செய்திட மு.க.ஸ்டாலின் அழைப்பு

சென்னை, மே.04-

இலங்கை மக்களுக்கு உதவிட முதற்கட்டமாக, 40 ஆயிரம் டன் அரிசி, 500 டன் பால் பவுடர் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளைத் தமிழ்நாடு அரசின் சார்பில் விரைவில் அனுப்பவுள்ளோம்.




இலங்கை மக்களுக்கு உதவ திமுக எம்எல்ஏகளின் ஒரு மாத ஊதியம் மற்றும் கட்சி சார்பில் ஒரு கோடி நிவாரண நிதி வழங்கப்படும் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பாக திமுக தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி" - என்பது வள்ளுவர் வாக்கு. "உலகம் உண்ண உண்" என்றார் பாவேந்தர் பாரதிதாசன். எல்லைகளைக் கடந்து உலக மாந்தராகச் சிந்திப்பதுதான் தமிழர் பண்பு. பிறர் துன்பம் கண்டு முதலில் துடிக்கும் நெஞ்சம் தமிழர் நெஞ்சம். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் உயரிய அறத்தை ஒழுகி நடக்கும் நாகரிகம் நம் நாகரிகம். அந்த வகையில், கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி அல்லலுறும் இலங்கை மக்களுக்கு உதவிட முதற்கட்டமாக, 40 ஆயிரம் டன் அரிசி, 500 டன் பால் பவுடர் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளைத் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒன்றிய அரசின் அனுமதியுடன் விரைவில் அனுப்பவுள்ளோம்.


மேலும், நெருக்கடியில் உள்ள இலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் விதமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடி வழங்கப்படும். இத்துடன், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என்பதையும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் என்ற முறையில் அறிவிக்க விரும்புகிறேன் என்றுள்ளதுடன் இந்த சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு உதவிடும் வகையில் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் நம்மால் இயன்ற உதவியினை செய்ய வேண்டிய தருணம் இது. எனவே மனிதாபிமான அடிப்படையில், இலங்கை மக்களுக்கு தேவையான உதவிகளை செய்திட நன்கொடைகள் வழங்குமாறும் பொதுமக்கள் வழங்கிடும் உதவிகளை இலங்கை மக்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மதச்சார்பற்ற அரசிற்கு மத நம்பிக்கைகளில் தலையிட என்ன உரிமை இருக்கிறது?

### இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழக தலைவர் தேவநாதன் யாதவ் கேள்வி

சென்னை, மே.04-

மதச்சார்பற்ற அரசிற்கு மத நம்பிக்கைகளில் தலையிட என்ன உரிமை இருக்கிறது? என இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழக நிறுவனத் தலைவர் தேவநாதன் யாதவ் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழக நிறுவனத் தலைவர் டாக்டர் தி.தேவநாதன் யாதவ், "தமிழகத்தில் மிகவும் பழமையான ஆதீனம்,நாகைமாவட்டம் மயிலாடுதுறையில் உள்ள தருமபுர ஆதீனம். இதன் ஞானபீடாதிபதியாக மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இருக்கிறார்.தருமபுரத்தில் நடைபெற உள்ள பட்டின பிரவேச நிகழ்ச்சியின் போது, வெள்ளிப் பல்லக்கில் ஆதீனம் வீதியுலா வருவது சுமார் 500 ஆண்டுகால பாரம்பரிய நிகழ்வு. ஆனால் தற்போது அந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு மாவட்ட கோட்டாட்சியர் தடை விதித்து உள்ளார்.

மதச்சார்பற்ற அரசு என தெருவுக்கு தெரு போஸ்டர் ஒட்டிக்கொள்ளும் திமுக, எந்த தைரியத்தில் இந்து மத நம்பிக்கைகளில் தலையிடுகிறது. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்தே இந்துக்களை தாழ்வு மனப்பாண்மையுடன் நடத்துவது, இந்து மத நம்பிக்கைகளை சிதைப்பது, இந்து கோவில்களை இடிப்பது போன்ற இந்து விரோதப்போக்கினை கையாண்டு வருகிறது. ஆளுநர் மயிலாடுதுறை ஆதினத்திற்கு வந்து சென்றார் என்ற தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் ஆதின நிகழ்விற்கு தடை விதிக்கலாமா? இது தான் திராவிட மாடல் ஆட்சியா? இது தான் சமூக நீதியா?

500 ஆண்டுகால பாரம்பரியத்தை தடை செய்வது ஏற்புடையதல்ல. இதற்கு முன்பிருந்த முதலமைச்சர்கள் யாரும் இது போன்று இந்து மத நம்பிக்கைகளில் தலையிட்டதில்லை. ஏன் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூட இதற்கு தடை விதித்ததில்லை. ஒரு சில திராவிட கழகத்தினர் எதிர்க்கிறார்கள் என்பதால் அவர்களை மகிழ்விப்பதற்கு இந்த நிகழ்ச்சியை தடை செய்வது கடும் கண்டனத்திற்குரியது.

கடவுளே இல்லை என்றும் இந்து மத நம்பிக்கைகளை மூட நம்பிக்கை என்றும் தொடர்ந்து இந்து மக்களுக்கு எதிராக இயங்கி வரும் சுயநல இயக்கம் திராவிடர் கழகத்திற்கு இந்து மத விவகாரங்களில் தலையிட எந்த அருகதையும் இல்லை. இந்துமதவிவகாரங்களில் தலையிடுவதை திராவிடர் கழகமும், திமுகவும் நிறுத்திக்கொள்ள வேண்டும்" என கூறியுள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# அமைச்சர் மெய்யநாதன் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்



அறந்தாங்கி, மே.04-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு,சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு, தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி யுள்ளார்கள்.அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆயிங்குடி மேற்கு மொச்சி பிள்ளையார் கோவில் அருகில் ரூ.6.36 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர் பிளாக் சாலை பணி, வல்லவாரி மேற்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.11.10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள சுற்றுச்சுவர் கட்டுமானப் பணி, ஆயிங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.7.40 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள சுற்றுச்சுவர் கட்டுமானப் பணி, ஆயிங்குடி ஆதிதிராவிடர் காலனியில் ரூ.14.16 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள மயான சாலை பணி, ஆயிங்குடி மேற்கில் ரூ.11.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள மயான சாலை பணி, மாத்தூர;இராமசாமிபுரம் மாரியம்மன் கோவில் அருகில் ரூ.8.49 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர; பிளாக் சாலை பணி ஆகிய பணிகளுக்கு பூமி பூஜை செய்து பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆயிங்குடி ஆதிதிராவிடர; காலனியில் ரூ.8.40 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேவர்பிளாக்சாலைபணி இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரகவளா;ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### அடுத்தடுத்து 2 விசாரணைக் கைதிகள் பலியானதையடுத்து

# காவல் நிலையங்களுக்கு டிஜிபி விடுத்த அதிரடி உத்தரவு

சென்னை, மே.04-

விசாரணை கைதிகளை இரவு நேரங்களில் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்க வேண்டாம் எனவும், மாலை நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க வேண்டுமெனவும் தமிழக டிஜிபி சைலேந்திரபாபு வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளார். உத்தரவில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது பார்க்கலாம்.

சென்னை கீழ்ப்பாக்கம் கெல்லீஸ் பகுதியில் பட்டாக்கத்தி மற்றும் கஞ்சா வைத்திருந்ததாக கடந்த மாதம் 18 ஆம் தேதி கைது செய்யப்பட்ட பட்டினப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த விக்னேஷிடம் தலைமைச் செயலக காலனி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், 19ஆம் தேதி அவர் உயிரிழந்தார். வலிப்பு வந்து விக்னேஷ் உயிரிழந்ததாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில், போலீசார் தாக்கியதன் காரணமாகவே விக்னேஷ் உயிரிழந்ததாக குடும்பத்தார் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும், விக்னேஷை காவல்துறையினர் துரத்திச் சென்று தாக்கும் சிசிடிவி காட்சிகளும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

அதேபோல், திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு பகுதியைச்சேர்ந்த சாராய வியாபாரி தங்கமணி என்பவரை போலீசார் கடந்த மாதம் 26 ஆம் தேதி கைது செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், திருவண்ணாமலை மாவட்ட கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட தங்கமணி கடந்த 27 ஆம் தேதி வலிப்பு வந்ததால் உயிரிழந்ததாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



ஆனால், போலீசாரின் கொடூர தாக்குதலே தங்கமணியின் உயிரிழப்புக்கு காரணம் என குடும்பத்தார் தரப்பில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. இவ்விரு வழக்குகள் தொடர்பான விசாரணை சிபிசிஐடி போலீசாருக்கு மாற்றப்பட்டு விசாரணையானது நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் சமூக வலைதளங்களிலும், பல்வேறு அரசியல் கட்சிகள் தரப்பிலும் லாக் - அப் மரணங்களுக்கு எதிராக கண்டனங்கள் கிளம்பி வருகிறது.

இந்நிலையில், தமிழக டிஜிபி சைலேந்திரபாபு அனைத்து மாநகர காவல் ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களுக்கு வாய்மொழி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். அதில், காவல்துறையினர் எக்காரணத்தைக் கொண்டும் விசாரணைக் கைதிகளை இரவு நேரங்களில் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்க கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கைது செய்யப்படும் விசாரணை கைதிகளிடம் காவல்துறையினர் மாலை நேரத்திற்குள் விசாரணையை முடித்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க வேண்டும் எனவும் டிஜிபி சைலேந்திர பாபு வாய் மொழி உத்தரவிட்டுள்ளார். இரு விசாரணை கைதிகளின் அடுத்தடுத்த மரணத்தைத் தொடர்ந்து இந்த உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நகை கடை வீதியில் உள்ள ஸ்ரீ ஜெய பிரபா ஜுவல்லர்ஸ் பிரைவேட் லிமிடெட்யில் அட்சய திருதியை முன்னிட்டு இந்த வருடம் சிறப்பு விற்பனை நடைபெற்றது. கடை உரிமையாளர் பிரபாகரன் அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,841 | Rs.5,240 |


## வரலாற்றில் இன்று



1921 வட அயர்லாந்து, தெற்கு அயர்லாந்து என அயர்லாந்து இரண்டாகப் பிரிந்தது.

1928 சீனா, சினானில் 12 சப்பானியப் பொது மக்கள் சீனப் படைகளினால் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக அடுத்தடுத்த நாட்களில் 2,000 வரையான சீனர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.[2]

1939 சுபாஸ் சந்திர போஸ் அனைத்திந்திய பார்வார்டு பிளாக்கு கட்சியை ஆரம்பித்தார்.

1941 பிபிசி தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

1942 இரண்டாம் உலகப் போர்: சப்பானியக் கடற்படையினர் சொலமன் தீவுகளின் துளகி தீவைக் கைப்பற்றினர்.

1945 இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய வான் படை கேப் அர்கோனா, தீல்பெக், இடாய்ச்சுலாந்து ஆகிய சிறைக்கப்பல்களை தாக்கி மூழ்கடித்தது.

1962 டோக்கியோவில் பயணிகள் தொடருந்துகள் சரக்கு தொடருந்துடன் மோதியதில் 160 பேர் உயிரிழந்தனர்.

1973 சிக்காகோவின் 1,51 அடி உயர 108-மாடி சியேர்ஸ் கோபுரம் உலகின் அதியுயர் கட்டடமாக அறிவிக்கப்பட்டது.

1978 முதலாவது எரித மின்னஞ்சல் ஆர்பாநெட் எனும் கணினி வலைப்பின்னலில் அமெர்க்காவில் அனுப்பப்பட்டது.

1986 கொழும்பு விமான நிலையத்தில் எயர்லங்கா 512 பயணிகள் விமானத்தில் குண்டு வெடித்ததில் 21 பேர் கொல்லப்பட்டு 41 பேர் காயமடைந்தனர்.

1999 ஐக்கிய அமெரிக்காவின் ஒக்லகோமா நகரை பெரும் சூறாவளி தாக்கியதில் 45 பேர் கொல்லப்பட்டும் 665 பேர் காயமும் அடைந்தனர்.

2001 1947 ஆண்டில் ஐநா மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக ஐக்கிய அமெரிக்கா ஆணையத்தில் உறுப்புரிமையை இழந்தது.

2002 இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம், ஜலந்தரில் இந்திய வான்படையின் மிக்-21 வானூர்தி ஒன்று வீழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்து, 17 பேர் காயமடைந்தனர்.

2006 ஆர்மீனியாவின் பயணிகள் விமானம் ஒன்று கருங்கடலில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.

2016 கனடா, ஆல்பர்ட்டாவில் மெக்மரி கோட்டையில் தீ பரவியதில் 88,000 பேர் இடம்பெயர்ந்தனர். 2,400 வீடுகள் அழிந்தன.

## சென்னையில் சின்னக் கலைவாணர் விவேக் சாலை பெயர் பலகை திறப்பு விழா



சென்னை மே.04-

மறைந்த நடிகர் விவேக்கின் மனைவி அருள்செல்வி சமீபத்தில் தமிழக முதல்-அமைச்சர் ஸ்டாலினை நேரில் சந்தித்தார். அப்போது விவேக் வாழ்ந்த வீடு அமைந்திருக்கும் சாலைக்கு அவரது பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை மனுவை அளித்தார்.

இந்த நிலையில் அவரது குடும்பத்தினர் மற்றும் திரையுலகினரின் கோரிக்கையை ஏற்று முதல்-அமைச்சர் அந்த கோரிக்கையை 5 நாட்களில் மின்னல் வேகத்தில் நிறைவேற்றி உத்தரவிட்டார்.

அதன்படி, திரையுலகில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நகைச்சுவை நடிகராக வலம் வந்த பத்ம ஸ்ரீ விவேக் நினைவாக அவர் வசித்து வந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் கோடம்பாக்கம் மண்டலத்தில் உள்ள பத்மாவதி நகர் பிரதான சாலையை 'சின்னக் கலைவாணர் விவேக் சாலை' என பெயர் மாற்றம் செய்து தமிழக அரசு அண்மையில் ஆணை வெளியிட்டது.

இந்நிலையில், நடிகர் விவேக்கின் வீடு அமைந்துள்ள சாலை "சின்னக் கலைவாணர் விவேக்" சாலை என மாற்றப்பட்ட நிலையில் பெயர் பலகையை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சென்னை மேயர் பிரியா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




## திருவனந்தபுரம் அருகே நடுரோட்டில் மருமகளை வெட்டி கொலை செய்த தாய்மாமன்



திருவனந்தபுரம் மே.04-

திருவனந்தபுரம் அருகே நடுரோட்டில் மருமகளை வெட்டி கொலை செய்த தாய் மாமனை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

திருவனந்தபுரம் அருகே ஸ்கூட்டரில் வந்த மருமகளை தடுத்து நிறுத்தி வெட்டி கொலை செய்த தாய் மாமனை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவது:-

கேரள மாநிலம், திருவனந்தபுரம் அருகே வர்க்கலா பகுதியில் வசிப்பவர் ஷாலு (வயது 37). இவருடைய கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கு 9 மற்றும் 12 வயதில் இரு மகன்கள் உள்ளனர். இவர் இந்த பகுதியில் ஒரு தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை பார்த்து வந்தார்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 28ம் தேதி இவர் தனது நிறுவனத்தில் இருந்து வீட்டிற்கு சாப்பிடுவதற்காக ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியில் வசிக்கும் ஷாலுவின் தாய்மாமன் அணில் என்பவர் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் ஸ்கூட்டரை மறித்துள்ளார். பின்னர் அவர் மறைத்துவைத்திருந்த கத்தியை கொண்டு ஷாலுவை சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் மயக்கமடைந்த நிலையில் அவர் அங்கிருந்து தப்பித்து ஓடினார்.

இதை கண்ட அக்கம் பக்கத்தினர் ஷாலுவை மீட்டு வர்க்கலா அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். இந்நிலையில் அணிலின் உறவினர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்த நிலையில் அவரை மடக்கி பிடித்தனர்.

இந்நிலையில் ஷாலூ சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். அதையடுத்து அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்து திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மருமகளை தாய்மாமனே வெட்டிக்கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தூத்துக்குடியில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் கர்ப்பிணி உட்பட 2 பேர் பலி



தூத்துக்குடி மே.04-

தூத்துக்குடி அண்ணாநகரில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் கர்ப்பிணி உட்பட 2பேர் உயிரிழந்தனர்.

தூத்துக்குடி அண்ணா நகர் 3 வது தெருவில் வசித்து வருபவர் முத்துராமன். கூலித்தொழிலாளியான இவர் தனது மனைவி காளியம்மாளுடன் வசித்து வருகிறார். இவர்களது மகள் காத்தம்மாள் என்ற கார்த்திகாவை கடந்த 10 மாதங்களுக்கு முன் மார்த்தாண்டம்பட்டியை சேர்ந்த செல்வராஜூக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளனர். கர்ப்பிணியான இவருக்கு கடந்த 4 நாட்களுக்கு முன் மார்த்தாண்டம்பட்டியில் வளைகாப்பு நடத்தி தூத்துக்குடியில் இருந்த தங்கள் வீட்டுக்கு பெற்றோர் அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை தந்தை, தாயுடன் அவர்களின் மகளான கர்ப்பிணி கார்த்திகா அயர்ந்து தூங்கி கொண்டிருந்திருக்கிறார். அப்பொழுது அதிகாலை 4 மணியளவில் வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்துள்ளது. இதன் இடிபாடுகளில் சிக்கிய தாய் மற்றும் கர்ப்பிணி மகள் இருவரும் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி உயிரிழந்தனர். வீட்டின் ஒரு ஓரத்தில் படுத்திருந்த முத்துராமன் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த தெற்கு காவல் நிலைய போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் இடிபாடுகளில் சிக்கிய இரு உடல்களையும் மீட்டு உடற்கூறுபரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதில் காயமடைந்த முத்துராமன் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கர்ப்பிணி பெண் மற்றும் அவரது தாயார் இறந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் ரம்ஜான் திருநாளை முன்னிட்டு ஆமினா அம்மாள் அறக்கட்டளை சார்பாக நலத்திட்ட உதவிகள்



தென்காசி மே.04-

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் ரம்ஜான் திருநாளை முன்னிட்டு ஆமினா அம்மாள் அறக்கட்டளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் ரம்ஜான் திருநாளை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு வீதி, வீதியாக சென்று ஆமினா அம்மாள் அறக்கட்டளை சார்பாக நகர் முழுவதும் சாதி பேதம் இன்றி அனைவருக்கும் பிரியாணி பொட்டலங்களும் இனிப்பு வகைகளும் வழங்கி ரம்ஜான் திருநாளை மூன் லேண்ட் ப்ரமோட்டர்ஸ் நிறுவனர் செய்யது இப்ராஹிம் தனது தந்தையுடன் கொண்டாடினார்.

மேலும் எம் கே எம் முகைதீன் பாட்சா ஏழைகளுக்கு ரூ.500 வழங்கினார். கடையநல்லூர் நகர்மன்ற துப்புரவு தொழிலாளர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்கள் பயன் பெற்று சென்றனர்.

தன்னார்வலர், ஆமினா அம்மாள் அறக்கட்டளை நிறுவனர், மூன் லேண்ட் புரமோட்டர்ஸ் அதிபர் செய்யது இப்ராஹிம் ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் தனது இல்லத்தில் வைத்து அன்னதானம் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆந்திர மாநிலம் கர்னூல் அருகே இளம்பெண் கொலை செய்து பிளாஸ்டிக் பேரலில் அடைப்பு

ஆந்திரா மே.04-

கர்னூல் அருகே இளம்பெண் பிளாஸ்டிக் பேரலில் இறந்து கிடந்த நிலையில் துப்பு கொடுப்பவர்களுக்கு போலீசார் பரிசு அறிவித்துள்ளனர்.

ஆந்திர மாநிலம், கர்னூல் மாவட்டம், வருவல் மண்டலம், சோமயாஜுல கிராமத்தில் ஊருக்கு வெளியே சாலையின் குறுக்கே சிறிய அளவிலான பாலம் உள்ளது. அங்கு சிறிய அளவிலான பிளாஸ்டிக் பேரல் ஒன்று இருந்துள்ளது.

அப்போது அதிலிருந்து துர்நாற்றம் வீசியதால் அந்த வழியாக சென்றவர்கள் அருகில் சென்று பார்த்துள்ளனர். அப்போது அதில் சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் உடல் இறந்த நிலையில் உள்ளே இருந்துள்ளது.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த பொதுமக்கள், இது குறித்து கர்னூல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பேரலில் அடைக்கப்பட்டு இருந்த பெண்ணின் உடலை மீட்டனர். கொலை செய்யப்பட்ட பெண் சேலை அணிந்து கழுத்தில் டாலர் செயின் மற்றும் கம்மல், மூக்குத்தி அணிந்து இருந்தார். இளம்பெண்ணை வேறு எங்கேயோ கொலை செய்து எடுத்துவந்து பேரலில் அடைத்துவிட்டு சென்றது தெரியவந்தது.

இதையடுத்து இளம் பெண்ணின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக கர்னூல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலை செய்யப்பட்ட பெண் அணிந்திருந்த நகைகள் அனைத்தும் அப்படியே இருப்பதால் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இறந்து கிடந்த பெண் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு போலீஸ் சார்பில் சன்மானம் வழங்கப்படும் என அறிவித்துள்ளனர்.

### தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சாம்பவர் வடகரையில்

## கோடை கத்திரி வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் நீர் மோர் பந்தல்



தென்காசி மே.04-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சாம்பவர் வடகரையில் கோடை கத்திரி வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் நீர் மோர் பந்தல், தர்பூசணி, குளிர்பானங்கள், பொதுமக்களுக்கு பயன் பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை செங்கோட்டை பேரூர் கழக திமுக சார்பில், தென்காசி வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் மா. செல்லத்துரை திறந்து வைத்தார். கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான், கடையநல்லூர் யூனியன் துணை சேர்மன் ஐ வேந்திரன் தினேஷ், பொறியாளர் அணி மாவட்ட செயலாளர் கருப்பணன், 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் முருகன், 11வது வார்டு உறுப்பினர் முகைதீன் கனி, ஒன்றிய கவுன்சிலர் சிங்கிலிபட்டி மணிகண்டன், புளியங்குடி நகர்மன்றத் தலைவர் விஜயா சௌந்தரபாண்டியன், குட்டி குமார், நல்லையா, 5வது வார்டு கவுன்சிலர் சுடலைமுத்து, ஐயப்பன், ராஜா, முன்னாள் திமுக நகர செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## கந்தர்வகோட்டை அருகே கொத்தகப்பட்டி நடுநிலைப் பள்ளிக்கு பொதுமக்கள் கல்வி சீர்



கந்தர்வகோட்டை மே.04-

கந்தர்வகோட்டை ஒன்றியம், கொத்தகப்பட்டியில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஊர் பொதுமக்கள் கல்வி சீர் வாரி வழங்கிய நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் சசிகலா முருகேசன், தலைமை வகிக்க, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பாப்பாத்தி காசிநாதன் முன்னிலையில் பள்ளியின் பொறுப்பு தலைமையாசிரியர் சு.இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்ட தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் முன்னாள் மாவட்டத் தலைவர் சி.முத்துசாமி, மாநில ஒருங்கிணைப்பாளரும் தொல்லியல் ஆய்வுக்கழக நிறுவனருமான ஆ.மணிகண்டன், புதுக்கோட்டை மாவட்ட தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாவட்ட அமைப்பு செயலாளரும், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர், இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான மு.முத்துக்குமார், காவல்துறை துணை ஆய்வாளர் இராசாத்தி, இல்லம்தேடி கல்வித்திட்ட கந்தர்வகோட்டை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் அ.ரகமதுல்லா, இ.தங்கராசு ஊராட்சி செயலாளர் திருஞானம், வார்டு உறுப்பினர் திருப்பதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

பள்ளிக்கு காதணி விழாவிற்கு தாய்மாமன் சீர் செய்வதைப்போல பொதுமக்கள் தாங்களாகவே முன் வந்து பள்ளிக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் தண்ணீர் தொட்டி, அறிவியல் அறிஞர்களின் புகைப்படங்கள், பீரோக்கள், மின்விசிறி, டேபிள் சேர், கணினி, கண்ணாடிகள், மாணவர்களுக்கு மதிய உணவு சாப்பிடுவதற்கு தட்டுடம்ளர்கள், பாய்கள், எழுதுபொருட்கள், நோட்புக், குடம், வரலாற்று தலைவர்கள் புகைப்படங்கள், பூமி பந்து, மரக்கன்றுகள் உள்ளிட்ட ஏராளமான பொருட்களை ஊர் பொதுமக்கள் மேளதாளம் முழங்க, பட்டாசுகள் வெடித்து, ஆடிப்பாடி அணிவகுத்து பள்ளிக்கு வந்து சீராக வழங்கி சிறப்பித்தனர்.

பின்னர் மாணவர்களின் பேச்சு, ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் மூ.கலைமணி, சுகன்யா ஆகியோருடன் தன்னார்வலர்கள் ப.அகிலாராணி, ப.லாபஸ்னி, வ.சந்தோஸ்னி, செ.பிரியா, தி.பவித்ரா, திவ்யா ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்வில் பள்ளி மேலாண்மை குழுவினர், ஊர் பொதுமக்கள், இளைஞர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக பள்ளியின் ஆசிரியர் நன்றி கூறினார்.

# ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் சிறப்பு வழிபாடு



சென்னை , மே. 4

சென்னை செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் வீ.எம்.ஜி பேலஸ் பின்புறம் ஈஸ்வரன் கோவில் தெருவில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் உலக மக்கள் நன்மை வேண்டி சித்திரை மாதம் அம்மாவாசை நாளன்று சித்தர்கள் அடியான் குருஜி ஜெ. பூபாலன் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு காலையில் சிறப்பு யாகசாலை பூஜை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அவரவர் கோரிக்கை ஏற்றார் போல் வேண்டுதல் நிறைவேற வேண்டி வெத்தலையில் எழுதி யாகசாலை அக்னி குண்டத்தில் போட்டு இறைவனிடம் வேண்டினர் இதனைத் தொடர்ந்து மூலவர் சிவபெருமானுக்கு பால், தயிர், தேன் போன்ற பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் மூலவர் சிவபெருமானுக்கும், வாலைக்குமரி அம்மனுக்கும், ஸ்ரீகாயத்ரிதேவி அம்மனுக்கும், 18சித்தர்களுக்கும் வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டு பின்னர் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது,

இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அவரவர் கோரிக்கையை ஏற்றார் போல் அகல் விளக்கேற்றியும் அர்ச்சனை செய்தும் நேற்றி கடனை பூர்த்தி செய்தனர் முடிவில் வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது

# ஆயப்பாடி பள்ளிவாசலில் ரம்ஜான் சிறப்பு தொழுகை





தரங்கம்பாடி, மே.4:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பகுதியில் உள்ள பள்ளிவாசல்களில் ரம்ஜான் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் பள்ளிவாசலில் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

இஸ்லாமியர்கள் ரமலான் மாதமான கடந்த மாதம் 30 நாட்கள் நோன்பு கடை பிடித்தனர். அந்த 30 நாட்களும் சூரிய உதயத்துக்கு முன்பு உணவு உட்கொண்டு நோன்பு இருந்தனர். மேலும் தினமும் ஐந்துவேளையும் தொழுதல், தர்ம காரியங்கள் அதிகம் செய்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டனர்.

நோன்பு மேற்கொண்ட ரமலான் மாதம் திங்கள்கிழமை முடிவடைந்த நிலையில் மாத தலைப்பிறை தென்பட்டதையடுத்து புனித ரம்ஜான் பண்டிகையை செவ்வாய்க்கிழமை சிறப்பாக கொண்டாடினார்கள்.

புனித ரம்ஜான் பண்டிகையையொட்டி தரங்கம்பாடி தாலுக்கா ஆயப்பாடி, பொறையார், சங்கரன்பந்தல், வடகரை, ஆக்கூர், திருச்சம்பள்ளி, கிளியனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பள்ளிவாசலில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு. சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

ஆயப்பாடி ஜாமிஆ மஸ்ஜித் பள்ளிவாசலின் முத்தவல்லி பஷீர் அகமது, செயலாளர் நூருல்லாஹ், பொருளாளர் ஹலில் ரகுமான், இமாம் கமாலுதீன், திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல்மாலிக் உள்ளிட்ட இஸ்லாமியர்கள் ஏராளமானோர் புத்தாடை அணிந்து சிறப்பு தொழுகையில் பங்கேற்றனர்.

# பாரதிய ஜனதா கட்சி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் சார்பில் இப்தார் நோன்பு துறப்பு நிகழ்ச்சி



திருவள்ளூர் , மே. 4

பாரதிய ஜனதா கட்சி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் சார்பில் இப்தார் நோன்பு துறப்பு நிகழ்ச்சி, மாவட்ட செயலாளர் ஆவடி லயன் டாக்டர் எஸ்.கே.எஸ். மூர்த்தி ஏற்பாட்டில், ஆவடி மேற்கு மண்டல் சிறுபான்மை பிரிவு தலைவர் நசீர் பாபு முன்னிலையில், ஆவடி சேக்காடு பகுதியில் அமைந்துள்ள சேவியர் பார்ட்டி அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில ஓபிசி அணி தலைவர் ஜெ. லோகநாதன், மாநில செயற்குழு உறுப்பினர் ராஜகுமார், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தலைவர் அஸ்வின் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட பொது செயலாளர் லயன் சீனிவாசன், மாவட்ட செயலாளர் ஆர்யா சீனிவாசன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் சீமான் மணி, மாவட்ட இளைஞரணி தலைவர் அபிலாஷ், மாநில மீனவர் அணி செயலாளர் வடிவேல், மாவட்ட பட்டியல் அணி தலைவர் ஆனந்தராஜ், மாவட்ட இளைஞரணி பொது செயலாளர் ரஞ்சித், ஆவடி மேற்கு மண்டல பிரபாரி சுமங்கலி பரத் மேற்கு மண்டல தலைவர் சீனிவாசன், மேற்கு மண்டல செயலாளர் சத்ய குமரவேல், மேற்கு மண்டல தொழில் பிரிவு தலைவர் வெங்கட், மாவட்ட இளைஞர் அணி செயற்குழு உறுப்பினர் விக்னேஷ், ஆவடி மேற்கு மண்டல் இளைஞரணி தலைவர் பிரபு, மேற்கு மண்டல நகர செயலாளர் நெல்லை ராஜா, மற்றும் பாரதிய ஜனதா கட்சியை சார்ந்த நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் நாம் மக்கள் இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை , மே. 4

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை, கோட்டாச்சியர் அலுவலகம் முன்பு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள காவல்நிலையங்களில் பல்வேறு கொலைகுற்றங்கள் குறித்து வழக்குப்பதிவு செய்யப்பட்டும் பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் பாதிக்கபட்டவர்களுக்கு நீதிகிடைக்கவலியுறுத்தியும் ஆர்பாட்டம் செய்தனர்.

நாம் மக்கள் இயக்க தலைவர், வழக்கறிஞர் சங்கமித்ரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 2012ம் ஆண்டு நாம்மக்கள் இயக்க தலைவர் வழக்கறிஞர் சங்கமித்திரனை கூலிபடையை வைத்து கொலைசெய்ய முயன்ற அப்போதைய பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் பவுன்ராஜ் மற்றும் கூலிப்படையை கைது செய்ய வேண்டும், சீர்காழி மணல்பாபு கொலைவழக்கில் உண்மை குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும், பொறையார் கேசவன்பாளையம் கவியரசி கொலைவழக்கு, செறுகடம்பூர் இளம்பெண் கொலைவழக்கு, சாதிமறுப்பு திருமணம் செய்துகொண்ட ஒலக்குடி காதலர் இரட்டை கொலைவழக்குகளை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்ற கோரி கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.




# அதிமுக சார்பில் அண்ணா தொழிற்சங்க மே தின பொதுக்கூட்டம்



திருவள்ளூர் , மே. 4

அதிமுக சார்பில் அண்ணா தொழிற்சங்க மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் அண்ணா தொழிற்சங்க மேதின மாபெரும் பொதுக்கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் ரா.சங்கரன் தலைமையில் புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சியில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு புழல் ஒன்றிய கழக செயலாளர் ஆர் . சுப்பிரமணி சோழவரம் ஒன்றிய கழக செயலாளர் பி.கார்மேகம். பகுதி செயலாளர்கள் டி . வேலாயுதம் மூ . கண்ணதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான மாதவரம் வி.மூர்த்தி. கழக அமைப்பாளரும் செய்தி தொடர்பாளருமான ஜேசிபி பிரபாகரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குப்பன் தலைமை கழக பேச்சாளர் ராஜகோபால், மா.சுந்தர் பாலச்சந்திரன் ராஜசேகரன் முனுசாமி புழல் ஒன்றிய இளைஞரணி செயலாளர் வடகரை ஆர் . நரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் எஸ். கண்ணதாசன் பாண்டியன் , தினேஷ்குமார் , பி.தமிழ்ச்செல்வன் எஸ். சரண் எஸ்.ஹரிகரன் எம் . மோகன்ராஜ் மற்றும் அதிமுக கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்

# அருள்மிகு சிவ சுடலை மாடசாமி பொன் இசக்கியம்மன் மற்றும் எல்லையம்மன் திருக்கோயிலில் சித்திரை மாத அமாவாசை விழா




திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் ஆரிக்கம்பேடு பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு சிவ சுடலை மாடசாமி பொன் இசக்கியம்மன் மற்றும் எல்லையம்மன் திருக்கோயிலில் செந்தமிழ் ஆகம அந்தணர் சிவ. து . சுரேஷ்குமார் தலைமையில் சித்திரை மாத அமாவாசை அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு உற்சவர் அம்மனுக்கு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு ஊஞ்சல் தாலாட்டு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அருள்மிகு சிவ சுடலை மாடசாமி பொன் இசக்கியம்மன் மற்றும் எல்லை அம்மனுக்கு படையல் வைத்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அருள்வாக்கு கூறப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.



திருவள்ளூர் மாவட்டம் ,திருநின்றவூரில் கிரிக்கெட் போட்டியை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்.இந்த போட்டியில் திருநின்றவூர் நகர திமுக செயலாளர் பூவை ரவி, நகர்மன்ற தலைவர் உஷாராணி, மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் டி.தேசிங்கு, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் சரளா நாகராஜ், நகரமன்ற துணை தலைவர் கருணாநிதி, ஹரி, நாகராஜ், ரவி,பாபு மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் ஜெ.அன்பழகன், டி.வி. சுரேஷ்குமார், சி.கமலக்கண்ணன் ஏ.சேகர்.எம்.கிருஷ்ணன், உஷாராணி வெங்கடேசன், எஸ்.சந்தோஷ் குமார், எம். ஜெயக்குமார், ராதா அசோக், தேவி, யோகா, சாந்திபாபு, திருநின்றவூர் நகர, நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் அனைத்து மாவட்டத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்.தொடர்ந்து, வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது




# அதிமுக சார்பில் மே தின விழாவையொட்டி மாபெரும் பொதுக்கூட்டம்




சென்னை , மே. 4

அதிமுக சார்பில் மே தின விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் சென்னை அம்பத்தூர் மார்க்கேட் முருகன் கோவில் அருகில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் தெற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் எஸ்.பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.அலெக்சாண்டர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கழக மாணவர் அணிச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். ஆர்.விஜயகுமார். கழக கலைப்பிரவு செயலாளர் திரைப்பட இயக்குனர் ஆர்.வி.உதய குமார். கழக சிறுபான்மை பிரிவு இணை செயலாளரும் முன்னாள் அமைச்சர் எஸ்.அப்துல் ரஹீம். தலைமை கழக பேச்சாளர்கள் இரா.ரவி, ஆர்.மணிமாறன், இதில் க.பா.து. செயலாளர் பி.கிஷோர், கழக மரு.அ.து. செயலாளர் டாக்டர் எம். ராமசாமி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் அதிமுக கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு இலவச சீருடை மற்றும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் முடிவில் மாநில சிறுதொழில் பிரிவு செயலாளர் எஸ்.வேலன் நன்றி கூறினார்

# பெரியபாளையம் உரக்கடையின் ஓட்டை பிரித்து ரூ.2 லட்சம் கொள்ளை: தொடர் கொள்ளையால் பெரியபாளையத்தில் பதட்டம் நிலவுகிறது



**ஊத்துக்கோட்டை, மே4-**

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் கிரகப்பிரவேசம் நகரில் வசித்துவருபவர் பெருமாள் நாடாரின் மகன் தேன்கனி (வயது38) ஆவார்.இவர் பெரியபாளையம் பஜாரில் செங்காத்தாகுளம் கூட்டுச் சாலையில் சிவா பெர்டிலைசர்ஸ் என்ற பெயரில் ஒரு உரக்கடையை நடத்தி வருகிறார். இந்நிலையில்,இவர் நேற்று முன்தினம் கடையில் விற்பனையான பணமான ரூ.2 லட்சத்தை கல்லாவில் வைத்து பூட்டி விட்டு வீட்டிற்கு சென்றார்.

இந்நிலையில்,நேற்று காலை கடையைத் திறந்த அவருக்கு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. கடையின் மேற்கூரையான சிமெண்ட் ஓட்டை லாவகமாக மர்ம நபர்கள் பிரித்துவிட்டு அதன் வழியே உள்ளே இறங்கியுள்ளனர். பின்னர், கல்லாவில் மொத்தமாக எண்ணி வைத்திருந்த ரொக்கப் பணம் ரூ.2லட்சம் மற்றும் இத்துடன் கடையில் உரங்கள் விற்பனை செய்த ரொக்க பாணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்றதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இந்த கடைக்கு அருகில் தொழிலதிபர் பிரதீஷ் என்பவரின் வீட்டில் கடந்த 23-ம்தேதி பூட்டை உடைத்து உள்ளே நுழைந்த மர்ம நபர்கள் 5கிலோ வெள்ளி,21 சவரன் தங்க நகைகள்,பல லட்சக்கணக்கான பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து சென்றனர்.இதேபோல் கடந்த 2 மாதங்களில் பெரியபாளையம் மேம்பாலம் அருகே பாத்திரக் கடையில் ஓட்டை பிரித்து பல ஆயிரம் கொள்ளை போனது.சிவன் கோவில் அருகே மளிகை கடையில் ஓட்டை உடைத்து பல ஆயிரம் திருடு போனது.

தொடர்ந்து இதுபோன்று கொள்ளைச் சம்பவங்கள் நடந்து வருகிறது என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால்,இன்று வரையில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்த துப்பு கிடைக்காததால் போலீசார் திணறி வருகின்றனர்.

இந்நிலையில், போக்குவரத்து நிறைந்த இந்த கடையில் கொள்ளை சம்பவம் நடந்துள்ளது. இந்த தொடர் கொள்ளை சம்பவங்களால் பெரியபாளையம் பகுதியில் பதட்டம், பரபரப்பு நிலவுகிறது. இந்த கொள்ளைச் சம்பவம் குறித்து தேன்கனி பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.சம்பவஇடத்துக்கு ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு சாரதி தலைமையில் போலீசார் விரைந்து வந்தனர். கைரேகைகளை பதிவு செய்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

## தருமபுர ஆதீனத்தில் நடைபெறும் பட்டினப்பிரவேசம் பல்லக்கு நிகழ்ச்சியை

# தடை செய்ததை கண்டித்தும், தடையை வாபஸ் பெறக்கோரியும் தருமபுரம் கிராம பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



மயிலாடுதுறை , மே. 4

மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரத்தில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சைவ ஆதீன மடம் அமைந்துள்ளது. ஆதினத்தில் ஆண்டுக்கு ஒருமுறை வைகாசி மாதத்தில் நடைபெறும் குரு பூஜையின் போது, ஆதீன மடாதிபதியை பல்லக்கில் அமர வைத்து நான்கு வீதிகளில் ஆதீன திருக்கூட்ட அடியவர்கள், சிஷ்யர்கள் சுமந்து செல்வது வழக்கம்.

பலநூறு ஆண்டுகளாக பாரம்பரியமாக நடைபெற்று வரும் இந்த நிகழ்ச்சியை தடை செய்ய வேண்டும் என்று திராவிடர் கழகத்தினர் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். வரும் 22ஆம் தேதி பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சி ஆதீனத்தில் நடைபெறுவதை தடை செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியருக்கு திராவிடர் கழகம் சார்பில் மனு அளிக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் திருபாலாஜி பட்டினப்பிரவேசம் நிகழ்ச்சிக்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக அரசியல்கட்சியினர் ஆன்மீக பேரவை அமைப்பினர் கண்டன குரல் எழுப்பி வரும் நிலையில், தருமபுரம் ஆதீனத்தை சுற்றியுள்ள மூங்கில்தோட்டம், முளைப்பாக்கம், கீழநாஞ்சில்நாடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராம மக்கள் பாரம்பரிய நிகழ்ச்சியை தடை செய்ய கூடாது என்று கூறி, உத்தரவை வாபஸ் பெற வலியுறுத்தி தருமபுர ஆதீன மடாலய முகப்பில் நின்றபடி கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்கள் மதம் சார்ந்த சம்பிரதாயங்களில் அரசு தலையிடக்கூடாது என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆபத்தான நிலையில் உள்ள மின் கம்பம்

# விபத்து ஏற்படுவதர்க்கு முன் மின்சாரவாரியம் மின்கம்பத்தை சரிசெய்யுமா? கிராம மக்கள் எதிர்பார்ப்பு



நாகப்பட்டினம், மே. 4

நாகைமாவட்டம் , திருமருகல் அடுத்து தென்பிடாகை அருகே ஆபத்தான நிலையில் மின்கம்பம் உள்ளது இந்த கிராமத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் அத்தியாவச பொருட்கள் வாங்க இந்த சாலைகளை நம்பி உள்ளனர் இந்த சாலைகள் மற்றும் விவசாயபணி மேற்கொள்ளும் வயல்களில் எப்பொழுது வேண்டுமானலும் சாயும் நிலையில் உள்ள மின்கம்பத்தை கடந்து பள்ளி மாணவ மாணவியர்கள் .பொதுமக்களும் பயணம் செய்கின்றனர் எனவே பெரும் அசம்பாவிதம் நடப்பதர்குள் மின்கம்பத்தை சரிசெய்யும்படி கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# ரம்ஜான் நாளில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கோடு மரக்கன்றுகள் வழங்கி கொண்டாட்டம்



புதுக்கோட்டை,மே.04-
ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடத்திய பின்னர் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை திருவப்பூர் நவாப் பள்ளிவாசல் சார்பாக கவிநாடு கண்மாயின் கிழக்கில் உள்ள ஈத்கா பள்ளி மைதானத்தில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு தொழுகை நடைபெற்றது.

இந்த ரம்ஜான் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட இஸ்லாமியர்கள் நாட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக பிளாஸ்டிக்கை தடுப்போம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மஞ்சள் பையும், உலகம் வெப்பமயமாதலை தடுக்க அனைவரும் மரக்கன்றுகளை நட வலியுறுத்தி அனைவரும் மரக்கன்றுகளை நடுவதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து அனைவருக்கும் இலவசமாக மரக்கன்றுகளும், மஞ்சப்பை, முக காசங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு நடத்தி மரக்கன்றுகளை பெற்றுச் சென்றனர்.

# திருப்பதியில் 5 வயது சிறுவன் கடத்தல் சிசிடிவி காட்சிகளை வெளியிட்ட காவல்துறை



திருப்பதி, மே.04-
திருப்பதியில் 5 வயது சிறுவனை கடத்திய நபர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

திருப்பதி,திருமலையில் 5 வயது குழந்தை கடத்தப்பட்டுள்ளது. இது குறித்து தேவஸ்தான கண்காணிப்பு கேமராவில் பதிவான வீடியோ காட்சிகளை வெளியிட்ட காவல் துறையினர், அதுகுறித்த தகவல் அளிக்க பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். ஆந்திர மாநிலம் திருப்பதி திருமலை ஏழுமலையான் கோயில் வளாகத்தில் வெங்கட்ரமணா என்பவர் பக்தர்களுக்கு நாமம் இடும் பணி செய்து வருகிறார். இவர் தனது 5 வயது மகனான கோவர்த்தனை தேவஸ்தானத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கு மகனை தனக்கு அருகில் அமரவைத்து, பணிசெய்து கொண்டிருந்திருக்கிறார். அப்போது திடீரென கோவர்த்தன் காணாமல் போயிருக்கிறார். இதைத்தொடர்ந்து திருமலையின் பல்வேறு பகுதிகளில் தேடியபோதும் அவர் கிடைக்கவில்லை. பல இடங்களில் தேடியும் மகன் கிடைக்காததால், திருப்பதி காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார்.

இதுகுறித்துவிசாரணை செய்து வரும் காவல் துறையினர், தேவஸ்தான கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்த போது, மொட்டையடிக்கப்பட்ட தலையுடன் உள்ள பெண் ஒருவர், 5 வயது சிறுவனை அழைத்து செல்வது தெரியவந்துள்ளது. திருமலையில் உள்ள பாலாஜி பேருந்து நிலையத்தில் இருந்து திருப்பதி பேருந்தில் ஏறுவதும் பதிவாகியுள்ளது. ஆனால் அதற்கு பின் குழந்தை என்ன ஆனது என தெரியவில்லை. இதைத்தொடர்ந்து அது குறித்த காட்சிகளை காவல் துறை வெளியிட்டுள்ளது. தகவல் தெரிந்தவர்கள் காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளவும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

# வெளிநாடுளை ஒப்பிடும்போது இந்தியப் பெண்கள் கணவரை பகிர்ந்துக்கொள்ள விரும்புவதில்லை – அலகாபாத் நீதிமன்றம்



அலகாபாத் மே.04-
வெளிநாடுளை ஒப்பிடும்போது இந்தியப் பெண்கள் தங்கள் கணவர்மார்கள் மீது அதீத அன்பை (பொசசிவ்னஸ்) வைத்திருக்கிறார்கள் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியைச் சேர்ந்தவர் சுஷில் குமார். ஏற்கனவே திருமணமாகி குழந்தைகள் இருக்கும் நிலையில், இவர் வேறொரு பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். முறையாக விவாகரத்து செய்யாமல் இருந்த நிலையில் அவர் மற்றொரு திருமணத்தை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இதனால் அவருக்கும், முதல் மனைவிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இந்த சூழலில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவரது முதல் மனைவி தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பாக தனது கணவர் சுஷில் குமார் மீது காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்திருந்தார். இதன் அடிப்படையில் போலீஸார் அவரை கைது செய்தனர்.

இதனிடையே, தன்னை விடுதலை செய்யக் கோரி சுஷில்குமார் தாக்கல் செய்த மனுவை விசாரித்த கீழமை நீதிமன்றம் அவர் கோரிக்கையை நிராகரித்த சூழலில், அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்தார். இந்த மனுவானது நீதிபதி ராகுல் சதூர்வேதி முன்பு விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு அவர் கூறியதாவது:

வெளி நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியப் பெண்கள் தங்கள் கணவர்கள் மீது அதீத அன்பை வைத்துள்ளனர். தங்கள் கணவரை யாரிடமும் பகிர்ந்து கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. அப்படியிருக்கும் போது, தனது கணவர் வேறொரு பெண்ணை ரகசிய திருமணம் செய்து கொண்டார் என்பது இந்தியப் பெண்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் அளவுக்கு கூட அவர்கள் சென்று விடுகிறார்கள். மேற்குறிப்பிட்ட வழக்கிலும் இதுதான் நடந்துள்ளது. சுஷில்குமார் வேறு திருமணம் செய்து கொண்டதை தாங்க முடியாமல்தான் அவரது மனைவி தற்கொலை செய்துகொண்டிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. எனவே இந்த வழக்கில் அவரை விடுதலை செய்ய முடியாது. இவ்வாறு நீதிபதி கூறினார்.

# மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கோயில் திருவிழாவில் கஞ்சா போதையில் இளைஞர்கள் தகராறு

மதுரை மே.04-
மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டியில் கோயில் திருவிழா கூட்டத்தில், கஞ்சா மற்றும் மது போதையில் இருந்த இளைஞர்கள் ஆயுதங்களுடன் புகுந்து தாக்கத் தொடங்கியதால் பதற்றம் ஏற்ப்பட்டது.

திருமங்கலம் அருகே டி.கல்லுப்பட்டியில் உள்ள புதுமாரியம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவின் ஒரு பகுதியாக, பலவேடம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் விதவிதமான வேடங்கள் அணிந்து ஊர்வலமாக வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

ஊர்வலம் தென்காசி சாலையில் சென்று கொண்டிருந்தபோது, கூட்டத்தில் மது மற்றும் கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் சிலர் ரகளையில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம் முற்றிய நிலையில், அவர்கள் ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர்.

கோயில் நிர்வாகிகள் அவர்களைக் கண்டித்தபோது, ஆத்திரமுற்ற ஓர் இளைஞர், அரிவாளை எடுத்து கூட்டத்தில் இருந்தவர்களை நோக்கி வீசத் தொடங்கினார். இதனால் ஊர்வலத்தில் பதற்றம் ஏற்பட்டது. தகவலறிந்து சென்ற காவல்துறையினர், அந்த இளைஞர்களைப் பிடித்துச் சென்றனர்.





| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,841 | Rs.5,240 |




▶ புதுக்கோட்டையில் நேற்று தமிழக வாழ்வுரிமை கட்சியினர் குடிநீரின் முக்கியத்துவம் குறித்தும் தண்ணீர் தட்டுப்பாட்டால் உயிரினங்கள் தவித்து வருவதை பொது மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் அட்சய திருதியை முன்னிட்டு தங்கம் வாங்க வந்தவர்களிடம் தண்ணீரை சேகரிப்பது குறித்த விழிப்புணர்வை வலியுறுத்தி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

# மாதவரம் அருகே அம்பேத்கர் விளையாட்டு மைதானத்தில் நலதிட்ட உதவிகள் வழங்குதல்



சென்னை ,மே.04-
சென்னை மாதவரம் கொசப்பூர் அருகே அம்பேத்கர் விளையாட்டு மைதானத்தில் நலதிட்ட உதவிகள் வழங்குதல், டாக்டர் அம்பேத்கர் தொழிலாளர் நலபாதுகாப்பு அறக்கட்டளை மற்றும் டாக்டர் அம்பேத்கர் ஆதிதிராவிட பழங்குடியினர் வீட்டு வசதி நலசங்கம் பெயர்பலகை திறப்பு விழா சிறப்பு பொது மருத்துவ முகாம் ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

முப்பெரும் விழாவில் சிறப்பு அழைப்பாளராக உயர்நீதிமன்றம் நீதியரசர் வல்லிநாயகம் வருகை தந்து குத்துவிளக்கேற்றி டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, அறக்கட்டளை மற்றும் சங்க பெயர்பலகை திறந்துவைத்து நலதிட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் எஸ்.விமலா முன்னாள் நீதிபதி. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முழுநேர உறுப்பினர் மாநில சட்ட ஆணையம், தமிழக அரசு, ஆர். ஏ.கே. என். வைத்தியநாதன் முன்னால் மாவட்ட நீதிபதி மற்றும் நடுவர், எஸ்.கணேசன் வழக்கறிஞர், எம். பி.சுரேஷ் கமோண்டிங் ஆபிசர், டி.ரமேஷ் புலணாய்வுதுறை ஆவடி, தக்ஷணாமூர்த்தி மணலி உதவி ஆணையர், அருள் சந்தோஷ் மாதவரம் உதவி ஆணையர், ஆர். ஜெய்சங்கர் 17வது வார்டு கவுன்சிலர், பி.பாலசுப்ரமணியம் மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பு ஆகியோர் விழாவில் சிறப்பித்தனர்.

விழாவில் பொதுமருத்துவ முகாமில் கண், காது மூக்கு, தொண்டை, இரத்த குறியூடுகள் பரிசோதனை, உயர் அழுத்தம் போன்ற பரிசோதனைகள் நடைபெற்றது. இதில் அம்பேத்கர் தொழிலாளர் நல பாதுகாப்பு அறக்கட்டளை தலைவர் உதயகுமார், செயலாளர் ஸ்டாலின், பொருளாளர் பதி, வீட்டு வசதி நலசங்கம் தலைவர் மதன்குமார், செயலாளர் செல்வகுமார், பொருளாலர் சுதர்சனம் மற்றும் வழக்கறிஞர் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## தேர்வு எழுதிக் கொண்டிருந்த

# பள்ளி மாணவி மீது மின்விசிறி விழுந்த அதிர்ச்சி சம்பவம் எங்கு தெரியுமா ?

ஆந்திரா மே.04-
ஆந்திராவில் தேர்வு எழுதிக் கொண்டிருந்த பள்ளி மாணவி மீது மின்விசிறி விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திரப் பிரதேச மாநிலம், ஸ்ரீ சத்ய சாய் மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பு தேர்வு நடந்து கொண்டிருந்தது. அப்போது அப்பள்ளியின் ஒரு வகுப்பறையில் திடீரென்று மின்விசிறி கழன்று தேர்வு எழுதிக் கொண்டிருந்த மாணவியின் மீது விழுந்தது. இதனால் சக மாணவர்கள், ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து மாணவிக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, எந்த ஆபத்தும் இல்லை என்று அரசு மருத்துவர்கள் உறுதி செய்த பிறகு தொடர்ந்து மாணவி தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டார். தேர்வுக்கு பின்னர் மாணவிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது மாணவி நலமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் கூறுகையில், "இது துரதிர்ஷ்டவசமான சம்பவம். தேர்வுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக தான் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு வகுப்பறையிலும் மின்விசிறிகள் சரியாக உள்ளனவா என ஆய்வு நடத்தப்படும்'' என்று அவர் தெரிவித்தார்.

# கொரோனா இல்லாத உலகமாக மாறிட வேண்டும் ரமலான் பண்டிகை தொழுகையில் பிரார்த்தனை





புதுக்கோட்டை , மே.04-
இஸ்லாமியர்களின் முக்கியமான பண்டிகையாககருதப்படும் ரம்ஜான் பண்டிகை நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களாக வைரஸ் தொற்று காரணமாக பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகைகள் ஈடுபடாமல் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தொழுகையில் ஈடுபட்டு ரம்ஜான் பண்டிகை கொண்டாடி வந்த நிலையில் தற்போது வைரஸ் தொற்று குறைந்துள்ளதால் நேற்று ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் அனைத்து பள்ளிவாசல்களிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இஸ்லாமியர்கள் ஒன்றுகூடி ரம்ஜான் பண்டிகையை கொண்டாடினர்.

அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை ஈத்கா பள்ளிவாசலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் ஒன்றுகூடி சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

இந்தத் தொழுகையில் கொரோனா இல்லாத உலகமாக மாற வேண்டும் வைரஸ் தொற்றில் இருந்து பொதுமக்கள் முழுமையாக குணமடைந்து வரவேண்டும். என்றும் நாளுக்குநாள் அதிகரிக்கும் வெயிலின் தாக்கத்தில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் விதத்தில் மழை பெய்வதற்கு இறைவன் அருள்புரிய வேண்டுமென ரமலான் பண்டிகை சிறப்பு தொழுகையில் ஈடுபட்ட இஸ்லாமியர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்து தொழுகையில் ஈடுபட்டு இனிப்புகளையும் வழங்கி மகிழ்ச்சியை தெரிவித்து கொண்டனர்.

# திருவள்ளூர் அருகே பிரத்யுஷா பொறியியல் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பாக சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு




திருவள்ளூர் , மே.04-
திருவள்ளூரை அடுத்த அரண்வாயல் குப்பம், பிரத்யுஷா பொறியியல் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பாக சாலை பாதுகாப்பு குறித்த படக்காட்சிகளுடன் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் பி.ஆர்.ரமேஷ் பாபு தலைமை வகித்தார். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் ஆர்.ஜி.தயாகரன் முன்னிலை வகித்தனர். ஒய் ஆர் சி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எம்.தினகர பிரசாத், கே.பச்சையப்பன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்த கருத்தரங்கில் மோட்டார் வாகன ஆய்வாளர் கா.பன்னீர் செல்வம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து கல்லூரி பேருந்து ஓட்டுனர்கள் ,மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்ட இந்த விழிப்புணர்வு முகாமில் பல்வேறு கேள்விகளுக்கு விளக்கம் அளித்து பேசினார். அப்போது தலைக்கவசம், சீட்பெல்ட், குடிபோதையில் வாகனத்தை ஓட்டுதல், செல்போன் பேசியபடி வாகனம் ஓட்டுதல், இருசக்கர வாகனத்தில் மூவர் பயணம், கை சைகைகள், சாலை குறியீடு, அதிவேகம், விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக காப்பாற்றுவது குறித்து, உதவி செய்வது குறித்து நல்லசமாரிட்டன் சட்டம், தமிழக முதல்வரின் நம்மை காக்கும் 48 திட்டம் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார்.

இதில் கல்லூரி மாணவ மாணவியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் இதர அலுவலர்கள் என மொத்தம் சுமார் 1000 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். முடிவில் கல்லூரியின் மக்கள் தொடர்பு அதிகாரி வெஸ்லி நன்றி கூறினார்

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடுத்தடுத்து மூன்று இடங்களில் தீ விபத்து



கள்ளக்குறிச்சி மே.04-
கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகா, திருநாவலூர் ஒன்றியத்தில் உள்ள நைனாகுப்பம் கிராமத்தில், நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டு மூன்று வீடுகள் எரிந்து முற்றிலும் சேதம் அடைந்தன.

நைனா குப்பம் கிராமத்தில் வசித்து வரும் கொளஞ்சி மகன் பாலகிருஷ்ணன் என்பவரது வீடு திடீரென தீப்பிடித்து எரிந்ததால், தீயை அணைக்க அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் முயற்சி செய்துள்ளனர். ஆனால் தீ சுவாலை மற்றும் புகை மூட்டம் அதிக அளவில் ஏற்பட்டதால், உளுந்தூர்பேட்டை தீயணைப்பு துறையினருக்கும், திருநாவலூர் காவல் துறையினருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர்.

இத்தகவல் அறிந்த திருநாவலூர் காவல் துறையினர் மற்றும் உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் சக்கரவர்த்தி தலைமையில், தீயணைப்பு நிலைய போக்குவரத்து அலுவலர் பூபாலன் மற்றும் தீயணைப்பு வீரர்கள் ரமேஷ், ஆனந்தவேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்து கொண்டிருந்தபோது திடீரென சிலிண்டர் வெடித்ததால் அருகில் இருந்த கொளஞ்சி மனைவி கனகவள்ளி மற்றும் ராசு மகன் சுரேஷ் ஆகியோரின் வீடுகள் அடுத்தடுத்து தீ பிடித்ததாலும், கோடைக்கால வெயிலின் தாக்கம் அதிகமானதாலும் தீயணைப்புத்துறையினர் கடுமையான போராட்டத்திற்கு பிறகு தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த தீ விபத்தினால் 3 வீடுகள் தீயில் கருகி தரைமட்டமானது, அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை, இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை அருகே உள்ள எடுத்தனூர் கிராமத்தில் வசித்து வரும் சுப்புராயன் மகன் வேல்முருகன் என்பவரது வீடு எரிந்து முற்றிலும் சேதமடைந்துள்ளது.

தொடர்ந்து கள்ளக்குறிச்சி தாலுக்கா, மாடூர் கிராமத்தில் வசித்து வரும் சந்தீப்பாலாயி என்பவரது வீடு தீப்பிடித்து எரிந்து முற்றிலும் சேதமடைந்த நிலையில், தகவலறிந்த கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவருக்கு அவசரகால நிவாரணமாக அரிசி மற்றும் உதவித்தொகை வழங்கினார், மேலும் அரசு நிவாரணம் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும், இலவச வீடு வழங்க வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பரிந்துரை செய்வதாக கூறியுள்ளார்.

ஒரே நாளில் பல இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கோடைகாலம் என்பதால் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ளதால் எளிதில் தீ விபத்து ஏற்படுகிறது, எனவே மாவட்ட நிர்வாகமும், தீயணைப்பு துறையும் பொதுமக்களிடையே தீ விபத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# சாத்தனூரில் சிறுவர்களுக்கான கபடி போட்டி



பொன்னமராவதி மே.04-

காரையூர் அருகே உள்ள சாத்தனூரில் சிறுவர்களுக்கான கபடி போட்டி நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை,திருச்சி,சிவகங்கை,மதுரை மற்றும் சுற்றுவட்டார கிராமங்கள் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து 36 அணிகள் கலந்து கொண்டு விளையாடினர். போட்டியினை அரசமலை ஊராட்சி மன்றதலைவர் பழனிவேல் தொடங்கி வைத்தனர்.

போட்டிகள் பல்வேறு சுற்றுகளாக நடத்தப்பட்டது. இதில் முதல்பரிசை காயாம்பட்டி அணியினரும், இரண்டாம் பரிசை திருக்களம்பூர் அணியினரும், மூன்றாம் பரிசை மனமேல்பட்டி அணியினரும், நான்காம் பரிசை புதுக்கோட்டை லேனா விளக்கு அணியினரும் வெற்றி பெற்றனர். பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் சிறந்த வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த போட்டியை காரையூர் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த திரளான பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

# திண்டிவனம் போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்றவர் மர்ம மரணம்

கடலூர் மே.04-

கடலூர் மாவட்டம் தூக்கணாம்பாக்கம் அடுத்த பள்ளிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் பார்த்தீபன் (வயது 40). இவருடைய மனைவி பெரியநாயகி (33). இவர்களுக்கு ஹேமஸ்ரீ (7), பிரகஸ்ரீ (4) ஆகிய 2 மகள்கள் உள்ளனர்.



மது குடிக்கும் பழக்கம் உடைய பார்த்தீபன், திண்டிவனம் பாஞ்சாலம் சாலை பகுதியில் உள்ள குடிபோதை மற்றும் மனநோய் சிகிச்சை மையத்தில் மது குடிக்கும் பழக்கத்தை கைவிடுவதற்காக சிகிச்சை பெற கடந்த மாதம் 14-ந்தேதி அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் கடந்த 21-ந்தேதி அன்று அதிகாலை 5 மணியளவில் சிகிச்சை மையத்தில் இருந்து பெரியநாயகியின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர், பார்த்திபனுக்கு வலிப்பு வந்து திண்டிவனம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இருப்பதாக தெரிவித்தனர்.

இதையடுத்து பெரியநாயகி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு சென்று தனது கணவரை பார்த்தார். இந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி பார்த்தீபன் இறந்தார்.

இதில் பெரியநாயகி மற்றும் அவரது உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த நிலையில் தனது கணவர் உடலில் காயங்கள் இருப்பதாகவும், அவரது சாவில் சந்தேகம் இருப்பதாகவும் ரோஷணை போலீசில் பெரியநாயகி புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மத்திய பிரதேசத்தில் வசதியில்லாததால் சைக்கிளில் உணவு டெலிவரி செய்தவருக்கு பைக் வாங்க பணம் கொடுத்த காவலர்கள்

மத்தியபிரதேசம் மே.04-

மத்திய பிரதேசத்தில் மிதிவண்டியில் உணவுப் பொருட்களை விநியோகித்து வந்த இளைஞருக்கு காவல்துறையினர் இருசக்கர வாகனம் வாங்க முன்பணம் வழங்கியுள்ளனர்.



ம.பி.யின் இந்தூரின் விஜய்நகர் பகுதியை சேர்ந்த ஜெய் ஹல்தே என்ற இளைஞர், மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு வசதி இல்லாத காரணத்தால் மிதிவண்டியில் சென்று உணவு விநியோகித்து வந்திருக்கிறார். அப்போது ரோந்து பணியில் ஈடுபட்ட காவல் ஆய்வாளர் தஹஜீப், இளைஞரின் வறுமை நிலை அறிந்து, சக காவலர்களுடன் இணைந்து அவருக்கு உதவ முன்வந்தார்.

மோட்டார் சைக்கிள் வாங்க முன்பணம் மட்டும் கொடுத்தால் போதும், மீதமுள்ள பணத்தை மாதத் தவணையில் கட்டி விடுவதாக இளைஞர் கூறிய நிலையில், அதற்கான பணத்தை மட்டும் காவல்துறையினர் செலுத்தி இரு சக்கர வாகனத்தை வாங்கிக் கொடுத்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## உத்தரபிரதேசத்தில் டெம்போ மீது

# கார் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பேர் பலியான கொடூரம்



உத்தரபிரதேசம் மே.04-

உத்தரபிரதேசத்தில் டெம்போ மீது கார் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

உத்தரபிரதேச மாநிலம், ஃபரூகாபாத் மாவட்டம், சிலொலி கிராமத்தை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் என 15-க்கும் மேற்பட்டோர் டெம்போவில் பாடியாலி பகுதியில் உள்ள ஆசிரமத்திற்கு சென்றனர். அவர்கள் அனைவரும் ஆசிரமத்திற்கு சென்றுவிட்டு, நேற்று காலை மீண்டும் சொந்த கிராமத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

படோன்-மெயின்புரி நெடுஞ்சாலையில் டெம்போ வந்தபோது எதிரே வேகமாக வந்த கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் டெம்போ கவிழ்ந்து டெம்போவில் பயணித்த 7 பேர், காரில் பயணித்த ஒருவர் என மொத்தம் 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்த 6 பேரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கர்நாடகா மாநிலம் கவுரிபித்தனூர் அருகே பண்ணை குட்டையில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி

பெங்களூர் மே.04-

கவுரிபித்தனூர் அருகே குளிக்க சென்றபோது பண்ணை குட்டையில் மூழ்கி 3 சிறுவர்கள் பலியான பரிதாபம் நடந்துள்ளது.

பெங்களூருவை சேர்ந்த சிறுவன் மனோஜ்(15). கோடை விடுமுறை என்பதால் சிக்பள்ளாப்பூர் மாவட்டம், கவுரிபித்தனூர் தாலுகா, ஹம்பசந்திரா கிராமத்தில் உள்ள தனது பாட்டி வீட்டுக்கு மனோஜ் வந்தான்.

மனோஜ், அதே கிராமத்தை சேர்ந்த தனது நண்பர்கள் லிகித்(16), ராஜேஷ் (16) உள்பட 6 பேருடன் சேர்ந்து கிராமத்தை ஒட்டி உள்ள பண்ணை குட்டையில் குளிக்க சென்றான். இதில் மனோஜ், லிகித், ராஜேஷ் ஆகிய 3 பேரும் குட்டையின் ஆழமான பகுதிக்கு சென்று குளித்ததாக தெரிகிறது.

இதனால் நிலைதடுமாறிய 3 பேரும் குட்டையில் மூழ்கி தத்தளித்தனர். அவர்கள் 3 பேரையும், சக நண்பர்கள் காப்பாற்ற முயன்றனர். ஆனால் அதற்குள் 3 பேரும் குட்டையில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இதுபற்றி தகவல் அறிந்த கவுரிபிதனூர் போலீசார், தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து குட்டையில் மூழ்கி பலியான 3 சிறுவர்களின் உடல்களை மீட்டனர். பின்னர் 3 பேரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இது குறித்து கவுரிபித்தனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு கவுரிபித்தனூர் எம்.எல்.ஏ. சிவசங்கர் ரெட்டி வந்து உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி தலா ரூ.10 ஆயிரம் நிவாரண தொகை வழங்கினார்.

# ஆந்திராவில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக 42 ஆசிரியர்கள் கைது

ஆந்திரா மே.04-

ஆந்திர பிரதேசத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக இதுவரை 42 பள்ளி ஆசிரியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு கைதாகியுள்ளனர்.

ஆந்திராவில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக பத்தாம் வகுப்புக்கு பொதுத்தேர்வு கடந்த ஏப்ரல் 27ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. முதல் நாளிலேயே தெலுங்கு வினாத்தாள் தேர்வு தொடங்கிய பின்னர் ஒரு மணி நேரம் கழித்து வாட்ஸ்அப் மூலம் பரப்பப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது நாட்களிலும் வினாத்தாள்கள் வெளியாகின.

ஆனால் உண்மையில் வினாத்தாள் எதுவும் கசியவில்லை என்றும் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்காக சில ஆசிரியர்கள் தேர்வு தொடங்கிய பின்னர் வினாத்தாள்களை வாட்ஸ் அப்பில் பரப்பி வினாத்தாள் வெளியானது போல் தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்ததாக ஆந்திர கல்வித்துறை விளக்கமளித்துள்ளது.

# உ.பி-யில் சிக்கிய ரூ.775 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள்

உத்தரப் பிரதேசம் மே.04-

அடுத்தடுத்து போதைப்பொருட்கள் சிக்கி வரும் நிலையில், உத்தரப்பிரதேசத்தில் வீடு ஒன்றில் இருந்து 775 கோடி ரூபாய் மதிப்பிலான ஹெராயின் என்ற போதைப்பொருளை குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் பறிமுதல் செய்தனர்.

பாகிஸ்தானில் இருந்து கடல் வழியாக குஜராத்துக்கு போதைப்பொருள் கடத்தலை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த வாரம் 280 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெராயினை கடத்திவந்த பாகிஸ்தானியர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக கடந்த 27ஆம் தேதி டெல்லி, உத்தரப் பிரதேசத்தில் 4 பேரை குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர். இதில் டெல்லியைச் சேர்ந்த ராஜி ஹைதர் ஜைதி ஹெராயின் கடத்தலில் முக்கிய புள்ளியாக கருதப்படுகிறது.

ஜைதி சிறையில் இருக்கும் நிலையில், உத்தரப் பிரதேசம் முசாபர் நகரில் உள்ள அவரது சகோதரி வீட்டில் இருந்து 155 கிலோ ஹெராயின் என்ற போதைப்பொருளை சிறப்பு படையினர் பறிமுதல் செய்துள்ளனர். சர்வதேச அளவில் அதன் மதிப்பு 775 கோடி ரூபாய் என்றும் கூறுகின்றனர். போதைப்பொருள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் என சந்தேகிக்கப்படும் 55 கிலோ ரசாயனப் பொருட்களும் சிக்கின. ராஜி ஹைதர் ஜைதி, கடலில் கைமாறும் ஹெராயினை நிலத்தில் இறக்கும் பணிகளை செய்து வந்ததாகவும் சிறப்பு படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



மதுரை அரசரடியில் உள்ள இறையியல் கல்லூரி மைதானத்தில் ரமலான் தினத்தை முன்னிட்டு இஸ்லாமிய பொதுமக்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். இதில் தலைமை தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தெற்கு மாவட்ட தலைவர் ஷேக் இப்ராஹிம் ,முகமது உசேன், மாநில அமைப்புச் செயலாளர் காதர் மைதீன், துணைப் பொதுச் செயலாளர் முகமது கவுஸ், மாவட்ட பொருளாளர் அப்துல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திமுகவை கண்டித்து புதுக்கோட்டையில்

# விரைவில் மின்வாரிய அலுவலகம் முன்பு அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் விஜயபாஸ்கர் எச்சரிக்கை

புதுக்கோட்டை மே.04-

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வந்த பிறகு திமுக தொடர்ந்து அராஜக போக்கில் ஈடுபட்டு வருவதாகவும் அதன் தொடர்ச்சியாக அரசு ஊழியர்களை பழிவாங்கி வருவதாகவும் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதுக்கோட்டையில் உழைப்பாளர் தின பொதுக்கூட்டம் மே1ம் தேதி மாலைசாந்தபுரத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய விராலிமலை எம்எல்ஏவும் சுகாதாரத் துறை அமைச்சருமான விஜயபாஸ்கர் பேசுகையில்: திமுக அரசு பதவி ஏற்ற பிறகு அதிமுக மீது அனுதாபிகளாக இருந்தவர்கள் மீதும் அதிமுக குடும்பத்தார் வாரிசுகள் அரசு பணியில் இருந்தால் தேடித்தேடி அவர்களை இடமாறுதல் உள்ளிட்ட பழிவாங்கும் செயல்களில் ஈடுபடும் நோக்கில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அந்த வகையில் புதுக்கோட்டை மின் வாரியத்தில் பணி புரிந்து வந்த உதவி பொறியாளர் பாஸ்கரன், போர்மேன் லெட்சுமணன் ஆகியோர் அருகில் உள்ள மாவட்டங்களான தஞ்சை, திருச்சிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கு காரணமாக இருந்த புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜாவை கண்டிப்பதாகவும் இடமாற்ற உத்தரவை உடனடியாக ரத்து செய்து இருவரும் அதே இடத்தில் பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லையெனில் விரைவில் புதுக்கோட்டை தலைமை மின்வாரிய அலுவலகம் முன்பு அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜாவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக அவரது ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் விஜயபாஸ்கரை கடுமையாக விமர்சித்தும் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என வலியுறுத்தி கண்டன வாசகர்களையும் தொடர்ந்து பதிவிட்டு வருகின்றனர்.

# மயிலாடுதுறையில் பாமக மாநில இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் பேட்டி

மயிலாடுதுறை மே.04-

மயிலாடுதுறை மாவட்டம் பேச்சாவடி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பாமகவின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பாமக இளைஞரணி தலைவரும் , மாநிலங்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ் பங்கேற்று நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:-



தமிழகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருட்கள் பள்ளிவாசலிலேயே எளிதாக கிடைப்பதாகவும் , இதற்கு காவல்துறையும் உடந்தையாகச் இருப்பதாகவும் காவல்துறையை சேர்ந்த உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் தமிழக முதல்வர் இதற்கென தனி கவனம் செலுத்தி அனைத்துக்கட்சி கூட்டத்தினை நடத்தி கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

மருத்துவ கல்வி வணிக மையமாவதை தடுக்கும் நோக்கில் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதாகும் , நீட் பயிற்சி சென்டர்கள் வருடத்திற்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் வரை மாணவர்களிடமிருந்து கொள்ளை அடிப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

தமிழகத்தில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் ஒன்பதாம் வகுப்புவரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் எனவும் , பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகள் மட்டும் நடத்தி மற்ற மாணவர்களுக்கு தேர்ச்சி அளிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இந்தகல்வி ஆண்டிற்குள் 10.5 % சதவீத இட ஒதுக்கீடு மீண்டும் கொடுக்க வேண்டும் என்பது தங்களது கோரிக்கையாக இருப்பதாகவும், நெய்வேலி என்எல்சியில் கடந்த வருட லாபம் மட்டும் 11,000 கோடி என்றும் ஆனால் சுற்றியுள்ள பொது மக்களுக்கு மருத்துவ வசதி உட்பட அடிப்படை வசதி எதுவும் செய்து தரப்படவில்லை என்றும் கடலூர் மாவட்டத்திற்கு என்எல்சி நிறுவனம் எதற்கு இருக்கின்றது எனவும் கேள்வி எழுப்பினார்.

பாமக ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகள் மூடப்படும் என நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார். தாங்கள் நிச்சயமாக ஆட்சிக்கு வருவோம் என்றும் , அமைச்சர் துரைமுருகனின் வாக்கு பளிக்கும் என அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார். மதுவிலக்கு தங்களால் மட்டுமே சாத்தியம் எனவும் அவ்வப்போது கூறினார்.

தர்மபுர ஆதீனம்பட்டின பிரவேசம் நிகழ்ச்சிக்கு கோட்டாட்சியர் தடை விதித்தது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு நம் முன்னோர்கள் கடைப்பிடிக்கக் கூடிய சில மரபு வழக்கங்களை நாம் பின்பற்ற வேண்டும் எனவும் ,இதில் எந்தத் தடையும் யாரும் விதிக்கக் கூடாது என்றும் நமக்கு உரிய சில கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை நாம் கடைபிடிக்க வேண்டுமென தெரிவித்தார்.

# விவாகரத்து செய்த மனைவி மெலிண்டாவை மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக பில் கேட்ஸ் பேட்டி

லண்டன் மே.04-

விவாகரத்து செய்த மனைவி மெலிண்டாவை மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக பில் கேட்ஸ் கூறியுள்ளார்.



உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும் மைக்ரோசாப்ட் நிறுவனருமான பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா தம்பதியரின் 30 ஆண்டு காலமண வாழ்வில் விரிசல் ஏற்பட்டு, அது சென்ற ஆண்டு முடிவுக்கு வந்தது. கடந்த ஆண்டு மே மாதம் இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். அவர்களுக்கு ஜென்னர், ரோரி மற்றும் போப் ஆகிய 3 பிள்ளைகள் உள்ளனர்.

இந்த நிலையில் லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு பில்கேட்ஸ் அளித்துள்ள பேட்டியில் மெலிண்டாவை மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "கடந்த இரண்டாண்டுகள் மிகவும் முக்கியமான காலகட்டமாகி போனது. இதற்கு காரணம் கொரோனா பெருந்தொற்று. எனக்கு இது வித்தியாசமான காலம்;சிலவற்றை உணர்த்திய காலம் இது. குழந்தைகள் வளர்ந்து வீட்டை விட்டு வெளியேறிய பிறகு ஒவ்வொரு திருமணமும் மாற்றத்தை நோக்கி செல்கிறது. விவாகரத்து ஆனாலும் எங்கள் திருமணம் சிறந்த திருமணம்.

நாங்கள் ஒன்றாக அறக்கட்டளையை உருவாக்கினோம். முன்னாள் மனைவியுடன் இன்னும் அறக்கட்டளையில் பணியாற்றுவதை அதிர்ஷ்டமாக உணர்கிறேன். எங்கள் அறக்கட்டளையின் வருடாந்திர ஊழியர் கூட்டம் ஜூன் மாதத்தில் நடைபெறுகிறது. மெலிண்டாவும் நானும் ஒன்றாக நடத்தும் வருடாந்திர கூட்டமும் இதுவாகும். மெலிண்டாவுடன் இன்னும் நட்புடன் இருப்பதாக நம்புகிறேன். அவருடன் எனக்கு மிக முக்கியமான, நெருக்கமான அதேசமயம் சிக்கலான உறவு இருந்தது. இருப்பினும் நாங்கள் ஒன்றாக வேலை செய்ய முடிவு செய்தோம்.

எங்களின் திருமணம் ஏன் முதலில் முடிவுக்கு வந்தது என்பதைப் பொறுத்தவரை திருமணங்கள் மிகவும் சிக்கலானவை, அதை ஆராய்வது வீணானது. விவாகரத்தின் தாக்கத்தில் இருந்து இருவரும் மீண்டு வருகிறோம். நான் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள மாட்டேன். ஆனால் நான் மெலிண்டாவை மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். எனது எதிர்காலத்தைப் பொறுத்தவரை, என்னிடம் எந்த திட்டமும் இல்லை, ஆனால் நான் திருமணத்தை பரிந்துரைக்கிறேன். மெலிண்டா கேட்ஸ் மீண்டும் திருமணம் செய்து கொள்வாரா என்பது எனக்குத் தெரியாது'' என்று பில்கேட்ஸ் கூறினார்.



# இலங்கைக்கு உதவுவோம் நிதி தாருங்கள்

# திருப்பதியில் 5 வயது சிறுவன் கடத்தல் சிசிடிவியில் காட்சிகள்





# தூத்துக்குடியில் வீடு இடிந்து கர்ப்பிணி உட்பட இருவர் பலி


சென்னை / புதுக்கோட்டை | 04.05.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று




## இன்றைய பிறந்த நாள்

**சத்திரசால்** , இந்திய ஆட்சியாளர் (பி, 1649) (இ. 1731)



**சாம் பிட்ரோடா** , இந்திய தொழில் முனைவாளர், கண்டுபிடிப்பாளர் (பி, 1942)



**சம்பிக்க ரணவக்க** , இலங்கை அரசியல்வாதி (பி, 1965)



## இன்றைய நினைவு நாள்

**திப்பு சுல்தான்** , மைசூர் பேரரசர் (பி, 1750) (இ. 1799)



**முத்து குமாரசுவாமி** , இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர் (பி, 1834) (இ. 1879)



**காயிதே மில்லத்** , தமிழக முசுலிம் அரசியல் தலைவர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி, 1896) (இ. 1972)



**டிராபிக் ராமசாமி** , தமிழக சமூக செயற்பாட்டாளர் (பி, 1934) (இ. 2021)



## பன்னாட்டுத் தீயணைக்கும் படையினர் நாள்

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.
தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்